( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.

**CC No. 59/2024**

**P.W. 2**

Name : ரூபினி
Father/Husband Name : வெங்கடேசன்
Caste :
Calling :
Religion :
Age :
Date : 18-03-2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.03.2025.

**எதிரிகள் ஆஜர் இல்லை, எதிரி வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசராணை – சத்திய பிராமணம் செய்யப்பட்டார்.**

1. நான் புகார்தாரர் பொற்செழியன் என்பவரிடம் வேலை செய்து வருகிறேன். பொற்செழியன் youtube மூலமாக கார் ஒன்றை வாங்கியிருந்தார். கார் வாங்குவற்காக மெக்கானிக்கை அழைத்து சோதனை செய்தார்கள். அதில் நிறைய பிரச்சனை இருந்ததால் சரி செய்ய வேண்டும் என்று சொன்னதால் ரூ.20 ஆயிரம் முன் தொகையை செலுத்த வேண்டும் என்றும் மீதி தொகை பின்பு செலுத்த வேண்டும் என்று சொன்னார்கள். 28/05/2023 அன்று ரூ. 20 ஆயிரம் முன் தொகை கொடுக்கப்பட்டது. 01/06/2023 அன்று முழு தொகையிம் கொடுத்தால் தான் கார் கொடுக்கப்படும் என்றும் இல்லையென்றால் வேறு நபருக்கு விற்று விடுவதாக சொன்னதன் அடிப்படையில் பொற்செழியன் நகைகளை அடைமானம் வைத்து பணம் பெற்று வங்கி மூலமாக சையது என்பவருக்கு அனுப்பி வைத்தார். அன்றைய தினமே காரை எடுத்து செல்லுங்கள் என்றும் காரின் உதிரி பாகங்கள் வந்ததும் சரி செய்து கொடுப்பதாக சொன்னதர்கள் 10 நாட்கள் கழித்து உதிரி பாகங்கள் வந்து விட்டதால் காரை கொண்டு வந்துவிடுங்கள் என்று சொன்னதால் காரை கொடுக்கப்பட்டது. 1 மாதம் ஆகியும் காரை திருப்பி கொடுக்கவில்லை.

2. காரின் ஆர்சி புத்தகத்தையும் 1 மாதம் ஆகியும் கொடுக்கவில்லை. வண்டி வாங்கிய நாளில் இருந்து பிரச்சனையாக இருந்தால் வண்டியை திருப்பி கொடுப்பதாக சொல்லிவிட்டார். 28/06/2023 அன்று பார்க்கிங் sale க்காக வண்டியை கொடுக்கப்பட்டது. மீண்டும் அடுத்து வண்டியை விற்று பணத்தை கொடுப்பதாக சுஷ்வான் சொன்னார். 3 மாதம் கழித்து போன் செய்த போது அவர்கள் எடுக்கவில்லை, அந்த இடத்தில் இருந்து

சொரூமை எடுத்ததாக சொன்னார்கள். நாங்கள் அனைவரும் அவர்களுடைய வீட்டிற்கு சென்று கேட்க சென்றோம் அவர்கள் எங்களை அசிங்கமாக பேசி வீட்டிற்கு வரகூடாது என்று சொல்லிவிட்டார்கள். நாங்கள் புகார் கொடுப்பதாக சொன்ன போது எங்கு வேண்டுமானாலும் புகார் கொடுங்கள் எங்களை எதுவும் செய்யமுடியாது என்று சொல்லிவிட்டார்கள் ஆட்களை வைத்து எங்களை காலி செய்து விடுவதாக மிரட்டினார்கள் நாங்கள் கேளம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம்.ஆனால் காவல் நிலையத்தில் அழைத்தும் அவர்கள் வரவில்லை. 8 நாட்கள்காவல் நிலையத்திற்கு சென்றபோதும் அவர்கள் வரவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எங்களுக்கு நகல் வழங்கப்பட்டது. பின்பும் தாம்பரம் காவல் ஆணையரிடம் புகார் கொடுத்தோம் அங்கு இருந்தது மீண்டும் கேளம்பாக்கம் காவல் நிலையத்திற்குதான் அனுப்பிவைத்தார்கள். மீண்டும் இணையதளம் மூலமாக புகார் கொடுக்கப்பட்டது எந்த நடவடிக்கையும் எடுக்கபடவில்லை. கடைசியாக நாங்கள் காவல்நிலையத்திற்கு சென்று என்ன ஆனது என்று கேட்டபோது விசாரணை செய்தார்கள் வண்டியை காட்டவில்லை என்று சொன்னோம். மறுநாள் போலிசார் வண்டியை கொண்டு வரும்படி சொன்னதால் வண்டியை எடுத்து வந்தார்கள். ஆனால் எங்களிடம் சொன்ன வண்டி எண் இல்லாமல் வேறு பதிவு எண் கொண்ட வண்டி எண் இருந்தது. மேலும்அந்த காரில் அதிக பிரச்சனை இருந்தது. வண்டியை போலிசார் எங்களை எடுத்து செல்லும்படி ஆனால் எங்களுக்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டோம். அதன் பின்னர் தான் இந்நீதிமனற்த்தில் இந்த புகார் கொடுக்கப்பட்டது.

S/d- N.Anupriya, 18.03.2025

Taken down by me in open court read over in the witness in the presence of the accused and admitted by the witness to be correct

DM cum JM/TPR.